ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/29 - 2024 මැයි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.05.16

*2384/29 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டதும் GA 2232 என்னும் கம்பெனி இலக்கத்தைக் கொண்டதும் பல்லேகல, குண்டசாலையில் அமைந்துள்ளதுமான ஸ்ரீலங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி (SIBA) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 1979/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை தலையங்க அட்டவணையின் கீழான உள்ளடக்கங்களை நீக்கிவிட்டு பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. ஸ்ரீலங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி (SIBA) ஆனது, குறைந்தபட்சம் 90 திறமை மதிப்பீடுகளுடன் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத்தொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 5) தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று 03 சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும் ;

1A - PG 6730 — 284 (2024/05)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. எது எவ்வாறிருப்பினும், மேலே குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு மேலதிகமாக, மாணவரொருவர் பின்வருவனவற்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந்திருக்குமிடத்து, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத்தொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி பட்டத்தின் நான்காம் அரையாண்டுக்கு அத்தகைய மாணவர் சேர்த்துக்கொள்ளப்படலாம்-

(அ) தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) வழங்கப்படும் ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா ; அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் வழங்கப்பட்டவாறாக இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காம் அரையாண்டுக்கு முன்னராக, அங்கீகரிக்கப்பட்ட திறமை மதிப்பீடுகளைப் பெறுவதற்கான ஏதேனும் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு அவசியமானவாறான எல்லா பாடத்திட்டங்கள்.

2. ஸ்ரீலங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி (SIBA) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத்தொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி | பீரெக் (ஐரி மற்றும் தொலைத்தொடர்பு) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, மே 14.

EOG 05-0124

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.